பெற்றவர்கள், சிறப்பு முனைவர் பட்டம் பெற்றவர்கள் ஆகியோர் தங்கள் பெயருக்கு முன்னால் டாக்டர் என்று போடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. தமிழ்நாடு பொறியாளர் சங்க உறுப்பினர்கள்— என்ஜினியர்ஸ் அசோசியேஷன்— தங்கள் பெயருக்கு முன்னால் ஈ.ஆர். என்று போட்டுக் கொள்வதும் வழக்கத்தில் இருந்து வருகிறது. இவை எல்லாம் பட்டங்கள். ஆனால் டிப்ளமோ என்பது பட்டம் அல்ல. அது பட்டயம். ஆகவே, அப்படி போட்டுக் கொள்வது முறையல்ல. இது குறித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிப்ளமோ படித்து என்ஜினியர்களாக இருந்தவர்கள்— ஹைவேஸில் என்ஜினியர்களாக இருந்து பிறகு அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்—பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகும் தங்கள் லெட்டர்பேடில் என்ஜினியர் என்று தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக் கொண்டு செயல்பட்டால் அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ஜினியர் என்று சொல்வது அந்தப் பதவியைக் குறிக்காமல், அந்தப் பட்டத்தைக் குறிப்பதாக இருந்தால் அவர்கள் போட்டுக் கொள்வதிலே தவறு இல்லையென்று அரசு கருதுகிறது.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 17, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

ஆவடி நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

*524—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகராட்சிப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்குத் தேவையான கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்திலே இருக்கின்ற உயர் நிலைப்பள்ளியில் சுமார் 1500 மாணவர்கள் படிக்கிறார்கள். இருபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கட்டிடமே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு முயற்சி செய்து, அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்தினால் 13 தொடக்கப் பள்ளிகளும், 5 நடுநிலைப் பள்ளிகளும், ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருபாலரும் பயில்கின்ற பள்ளிகள் பராமரிக்கப்படுகின்றன. நகரியத்தால் பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்று தனியாக எதுவும் பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு வேலைகள் மட்டுமே நகரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. புதிதாகக் கட்டிடம் கட்டித் தரும் பணி எதுவும் நகரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை. ஆவடி நகரியம், பட்டாபிராம் சத்திரம் பகுதியில் ஆண், பெண் இருபாலரும் படிக்கும் ஒரு பள்ளியை பராமரித்து வருகிறது. மேற்படி பள்ளியின் ஒரு கட்டிடத்தின் கூரையை மாற்றி கல்நார் கூரை அமைக்க ரூ. 80,000 மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறன.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 80,000 ரூபாய் மதிப்பீட்டிலே கூரை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணி இன்னும் நடைபெற ஆரம்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஆவடி நகரியத்திலே இது தவிர 2 பள்ளிகள் இருக்கின்றன. 10 ஏக்கர் பரப்பளவிலும், 5 ஏக்கர் பரப்பளவிலும் ஒரு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறன. அந்த இடங்களுக்குப் பட்டா கொடுக்காத காரணத்தால் இன்றைக்குப் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் மூலமாகக் கட்டிடம் கட்ட முடியாத ஒரு நிலை இருக்கிறது. அருள்கூர்ந்து அந்த இடத்திற்கு, அதாவது ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும், பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் பட்டா கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி காமராசர் நகர் பகுதியில் ஒரு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசின் கல்வித் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அது நகரியத்தைச் சார்ந்தது அல்ல. நகரியத்தைச் சார்ந்திருக்கின்ற எந்தப் பள்ளிக் கட்டிடமாக இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் கூறி இருக்கின்ற குறைபாடுகள் விரைவில் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18. திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா

நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

*10198—திரு. ஆர். கோடிமாரி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை நகர் முழுவதும் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்காது, தாய்மார்கள் அவதிப்படுகின்றனர். நாகை நகரத்தில் தண்ணீர் என்பது எட்டாத கனியாக இருக்கிறது. தாய்க் குலத்தின் தெய்வமாகிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சி. எஸ். ஐ. மேல்நிலைப்பள்ளி அருகில் ஒரு மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்தால் எங்கள் நாகை